**சுருக்கம்**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – இளநிலைப் பொறியாளர் நிலையில் தகுதி வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து 2009–10ம் ஆண்டிற்கான, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39 (a) (i) ன் கீழ் தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்க தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை**

**அரசாணை (ப) எண்.687** **நாள் 21.12.2009.**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (ப) எண்.231, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 29.4.2009.
2. அரசாணை (ப) எண்.378, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 23.6.2009.
3. அரசாணை (ப) எண்.554, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 23.9.09.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.23132/2009/இஇ1, நாள் 17.11.2009.

–––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உதவி செயற்பொறியாளர் பதவிக்கு காலிப் பணியிட மதிப்பீடு 60 என்று நிர்ணயிக்கப்பட்டதின் அடிப்படையில், 60 உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களுக்கு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது 23.6.2009, 1.7.2009 மற்றும் 3.10.2009 நாளிட்ட நடவடிக்கைகள் எண்.23132/2009/இஇ1ல் மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் உதவிப் பொறியாளர்களுக்கு(ஊ.வ) உதவி செயற்பொறியாளர்களாகப்(ஊ.வ) பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

2. உதவி செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு 2009–10ம் ஆண்டிற்கு காலிப் பணியிடங்கள் 60 என்று நிர்ணயம் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர், சுனாமி திட்ட செயலாக்க அலகில் திட்டப் பணிகளின் செயலாக்கத்திற்கு 12 சுற்றுப்புற வல்லுநர் (Environmental Specialist) மற்றும் 11 கொள்முதல் வல்லுநர் (Procurement Specialist) பணியிடங்களை உதவி செயற்பொறியாளர் நிலை அலுவலர்களைக் கொண்டு நிரப்பவும், மேலும், அரசாணை (நிலை) எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 8.6.2009ல் IFAD உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி திட்டத்தினைச் (TSLP) செயல்படுத்த ஒரு மாவட்டத்திற்கு ஒரு பணியிடம் என்ற விகிதத்தில் 6 சுனாமி திட்ட செயலாக்கச் மாவட்டங்களில் உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதாலும், மேலும் அரசாணை (ப) எண்.533, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 14.10.2009ல் 34 உதவி செயற்பொறியாளர்களுக்கு, செயற்பொறியாளர் பதவி உயர்வு அளித்து ஆணையிடப்பட்டுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட ( 12 + 11 + 6+ 34 ) = 63 உதவி செயற்பொறியாளர் (ஊவ) காலிப் பணியிடங்களை பொது நலன் கருதி தகுதியுள்ள உதவிப் பொறியாளர்களைக் கொண்டு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39 (a) (i)ன் கீழ் தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர் பணியிடங்களில் நியமனம் செய்வதற்கு, ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரையின்படி, மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் 41 உதவிப்பொறியாளர்களை உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கத் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் மேற்குறிப்பிட்ட 41 உதவிப் பொறியாளர்களுக்குத் தற்காலிக உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, அக்காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலே நான்கில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது செயற்குறிப்பில் 2009–10ம் ஆண்டிற்கு மீதம் காலியாக உள்ள 21 உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை, பொதுநலன் கருதி, தகுதியுள்ள இளநிலைப் பொறியாளர்களைக்(ஊ.வ) கொண்டு, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிவிதிகளில், பொது விதி 39 (a) (i)ன் கீழ் தற்காலிகமாகப் பதவி உயர்வு அளித்து உதவி செயற்பொறியாளர் பணியிடங்களில் நியமனம் செய்ய உரிய படிவங்களுடன் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 25.1.2000ல் வெளியிட்ட தற்காலிக விதிகளின்படி (Adhoc Rules) உதவி செயற்பொறியாளர் பணியிடங்களில் கீழ்காணும் முறைப்படி பணி நியமனம் செய்யப்படுகின்றார்கள்.

(i) உதவிப்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதன் மூலம்; மற்றும்

(ii) இளநிலைப் பொறியாளர் (JE) / முதுநிலை வரைதொழில் அலுவலர்களுக்கு (SDO) 6:2:1 என்ற விகிதத்தில் பதவி உயர்வு அளிப்பதன் மூலம்

மேற்குறிப்பிட்ட தற்காலிக விதிகளில், விதி 4ன்படி உதவி செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படுவதற்கு வளர்நிலை பணிவகையிலிருந்து (Feeder category) 5 ஆண்டு காலப் பணியினை நிறைவு செய்திருக்க வேண்டும். தற்போது பணியில் உள்ள இளநிலைப் பொறியாளர்கள் 29.6.2004 முதல் அப்பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள். இவர்கள் 28.6.2009 அன்று 5 ஆண்டு காலப் பணியினை நிறைவு செய்துள்ளனர். முதுநிலை வரைவுதொழில் அலுவலர் (SDO) பணியிடங்கள் அனைத்தும் தற்போது காலியிடங்களாக உள்ளன. உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்குப் பதவி உயர்வு அளிக்கத் தேவையான, தகுதியுள்ள முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் யாரும் இல்லை.

4. மேலும், மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4ன் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து, 2009–10ம் ஆண்டிற்கான 19 உதவி செயற்பொறியாளர்(ஊ.வ) காலிப்பணியிடங்களுக்குத் தகுதிவாய்ந்த இளநிலை பொறியாளர்களுக்குத் தற்காலிகமாகப் பதவி உயர்வு அளிக்கும் பொருட்டு, நீதிப்பேராணைகள் (W.P)எண்கள்.654/2007 மற்றும் 3718/2008-ல் பல்வகை மனு (M.P.No.3/2008 in W.P.(MD).No.3718/2008) ஆகியவைகளின் இறுதி தீர்ப்புகளுக்குட்பட்டு, கீழ்க்காணும் 19 உதவி செயற் பொறியாளர்(ஊ.வ) பதவிக்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

| | |
|---|---|
| 1 | எஸ்.கிருஷ்ணமூர்த்தி |
| 2 | எல்.புஷ்பராஜ் |
| 3 | எஸ்.ராமசாமி |
| 4 | ஆர்.அந்தோணிராஜ் |
| 5 | ஆர்.குமார் |
| 6 | எஸ்.கலைச்செல்வன் |
| 7 | எஸ்.ராஜகோபால் |
| 8 | சி.மசூம் பாஷா |
| 9 | கே.இளங்கோ |
| 10 | எஸ்.செல்வராஜு |

| | |
|---|---|
| 11 | ஆர்.எஸ்.சொக்கலிங்கம் |
| 12 | ட்டி.சுவாமிநாதன் |
| 13 | கே.தண்டபாணி |
| 14 | எஸ்.இளங்கோவன் |
| 15 | எஸ்.ராமசாமி |
| 16 | எம்.குமார் |
| 17 | எம்.நெடுமாறன் |
| 18 | எஸ்.விஜயன் |
| 19 | ஆர்.ரமேஷ்குமார் |

**5.** மேலே பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள 19 இளநிலைப் பொறியாளர்களை உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39 (a)(i)ன் கீழ் உதவி செயற்பொறியாளர்களாகப்(ஊ.வ) தற்காலிகமாகப் பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. உதவி செயற்பொறியாளர்களாகப்(ஊ.வ) பதவி உயர்வு அளிக்கப்பட்ட இளநிலைப் பொறியாளர்கள்(ஊ.வ), உதவி செயற்பொறியாளர்(ஊ.வ) பணியிடத்தில் காலிப் பணியிடங்கள் இல்லாத நிலையில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இளநிலைப் பொறியாளர்களாகப்(ஊ.வ) பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி 4ல் கண்ட, தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர்களாகப்(ஊ.வ) பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ள 19 தற்காலிக உதவி செயற்பொறியாளர்களின் பணியினை, வரன் முறைசெய்ய, வரும் 2010–11ம் ஆண்டில் உதவி செயற்பொறியாளர்கள்(ஊ.வ) பணியிடங்களுக்கான முறையான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடும் பொழுது, மேற்குறிப்பிட்ட உதவி செயற்பொறியாளர்(ஊ.வ) பணியிடங்களை, காலிப் பணியிடங்களாகக் கருதி, முறையான தேர்தோர் பெயர் பட்டியல் வெளியிட்ட பின்னர் வரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
சம்மந்தப்பட்ட அலுவலர்கள் (வழி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–6/18 (கணக்கு / தணிக்கை)
<u>நகல்</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் செயலாளர்,
சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.